அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 50/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்– கொழும்பு . 7
1989, ஒக்டோபர் 11 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

நீதி உத்தியோகத்தர்கள் / அரசாங்க உத்தியோகத்தர்கள் / மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனப் பணியாளர்கள் என்போர்களுக்கு அரசாங்க வாகனங்களின் உரிமையை வழங்குதல்.

1984.08.15ஆந் திகதியிட்ட 264ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் 1988.02.11ஆந் திகதியிட்ட 6/88ஆம் இலக்கச் சுற்றறிக்கை என்பவற்றின்படி, கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உத்தியோகபூர்வ, தனியார் போக்குவரத்திற்காகச் செய்வதற்கு உரித்துடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் கூட்டுத்தாபனப் பணியாளர்களுக்கும் அரசாங்க வாகனங்களைக் குறித்தொதுக்குவதற்கு உடனடியாகத் திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) வீதிமைல் நீள அளவில் 100,000 கிலோ மைல்களைப் பூர்த்தி செய்யும் வரை அல்லது 5 ஆண்டுகள் முடிவடையும் வரை குறித்தொதுக்கப்பட்ட வாகனம் அரசாங்கத்தின் சொத்தாகவிருக்கும்.

(ii) வாகனத்தின் கையேற்ற நேரத்தில் உத்தியோகத்தர், வாகனத்தின் கொள்வனவு விலையின் 10 நூற்று வீதத்தை (செ.கே.கா. செலவையும் வியாபார மொத்த விற்பனை வரியையும் உள்ளடக்கி) அரசாங்கத்திற்குக் கொடுப்பார்.

(iii) வாகனத்தைச் செலுத்துதல், சேவை நிலைப்படுத்தல், பேணுதல் மற்றும் வழக்கமான பழுதுபார்த்தலை மேற்கொள்ளுதல் ஆகியவற்றைச் செய்யுமாறு உத்தியோகத்தர் வேண்டப்படுவார். உத்தியோகத்தர் சாரதி ஒருவரை தமது சொந்தச் செலவில் கூலிக்கு அமர்த்தலாம். உடன்படிக்கைக் காலத்தில் திருத்தல் மற்றும் பேணல் என்பவற்றின் பொருட்டு உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் மொத்த செலவுகளில் நூற்றுக்கு 5% வீதம் அவர்களுக்குச் செலுத்தப்படும்.

( IV ) உடன்படிக்கைக் காலத்தில் உத்தரவுச் சீட்டு, காப்புறுதிக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து உத்தியோகத்தர்களுக்கு விலக்களிக்கப்படும்.

( V ) மாதமொன்றில் 22 நாட்களுக்கு ஒரு தடவை தினசரி சராசரியாக 60 கிலோ மைல் வீதத்தில் (அதாவது மாதமொன்றுக்கு 1320 கிலோ மைல்) உத்தியோகத்தருக்கு எரிபொருள் வழங்கப்படும். உயர் எல்லை மாதமொன்றுக்கு 1500 கிலோ மைல்களாக விதிக்கப்படலாம். எனினும் இக்கொடுப்பனவுகளின் மீதியை சொந்த நோக்கங்களின் பொருட்டு பாவித்துக் கொள்ளலாம்.

( VI ) உத்தியோகத்தருக்கு இலவசமாக 10 கலன் பெற்றோல் வழங்கப்படும் அல்லது மாதமொன்றுக்கு 300 கிலோ மைல் வரை சொந்த ஓட்டத்திற்கு வாகனத்தை பயன்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலே குறித்த அளவு விஞ்சப்படுமிடத்து ஓட்டமைல் ஒன்றுக்கு 6/- ரூபாவாகவுள்ள வர்த்தக வீதத்தில் செலவுகளை மீள நிரப்புமாறு உத்தியோகத்தர வேண்டப்படுவார.

( VII ) உற்பத்தியாளரின் தொழினுட்பக் குறைபாடு ஒன்றின் விளைவாக பெரிய பழுதுபார்த்தல் ஒன்றினை மேற்கொள்ள வேண்டிய அரிய நிகழ்வு சம்பவிக்குமிடத்து அச்செலவுகள் உத்தரவாத காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட கம்பனியினால் பொறுத்துக் கொள்ளப்படல் வேண்டும். இத்தேவைப்பாட்டை செயற்படுத்தும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

( VIII ) 'செயற்பாட்டிலுள்ள' உடன்படிக்கை காலாவதியாகுவதற்கு முன் உத்தியோகத்தரொருவர் இளைப்பாறுமிடத்து வாகனத்தின் உடைமையைக் கையளிக்கு முன் அவ்வுத்தியோகத்தரிடமிருந்து கழிக்கத்தக்க விகிதசமமான தொகைகள் அட்டவணை 1இல் (இணைக்கப்பட்டுள்ளது) உள்ள தெரிவு செய்த டீஸ்ரேடி மாதிரிகளுக்குக் கணக்கிடப்படும். இதே முறையியல் பிறவகை வாகனங்களின் தொடர்பிலும் அறவீடுகளைக் கணக்கிடுவதற்கு உபயோகிக்கப்படலாம்.

(IX) ஆகக்குறைந்தது 3 ஆண்டுக்காலம் இத்திட்டத்தில் உத்தியோகத்தரொருவர் இருக்கக் கூடியதாக இத்திட்டம் 57 வயதுடைய அல்லது அதற்குக் குறைந்த வயதுடைய உத்தியோகத்தருக்கு ஏற்புடையதாகவிருக்கும்.

(X) சொல்லப்பட்ட நிறுவனத்தில் 5 ஆண்டுக் காலத்தைப் பூர்த்தி செய்ய முன் ஒரு புதிய நிலைக்களத்திற்கு இடமாற்றத்தின் பேரில் செல்லக் கூடிய அல்லது நீண்ட காலப் படிப்பு லீவில் வெளிநாடு செல்வதை எதிர்பார்க்கின்ற உத்தியோகத்தர்கள் இத்திட்டத்தை விருப்புத் தேர்வு செய்வதற்கு ஊக்குவிக்கப்படுமாறில்லை.

03. இத்திட்டம் முன்னோடி அடிப்படையொன்றின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும். அறவீட்டு வீதங்களையும் திட்டத்தின் நெறிப்படுத்தலையும் பொறுத்து இத்திட்டமானது மேலே குறிப்பிட்ட சிறப்புரிமைக்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள் யாவருக்கும் நீடிக்கப்படலாம்.

04. அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களின் செயலாளர்களுக்கும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கும் வாகன ஒதுக்கீடுகளைச் செய்யும் திட்டம் பேணப்படும். எனினும் இந்த உத்தியோகத்தர்களும் கூட விரும்பினால் இப்புதிய திட்டத்தில் சேர்வதற்கு விருப்புரிமை தெரிவிக்கலாம்.

ஒப்பம்: பீ.என்.எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.